**அ.வ.எண்:126 /2016                    நாள்: 12.11.2025**

வா.சா.1 – வெள்ளைச்சாமி

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

**<u>1.2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. தாவா சொத்தின் சர்வே எண் என்ன என்றால் சர்வே எண் 610/4 ஆகும். தாவா சொத்து மற்றும் நான் இருக்கும் இடம் ஆகியவை நத்தம் மனை இடமாக பழைய சர்வே எண் 610/1–ல் கட்டுப்படும் என்றால் சரிதான். நான் மற்றும் மற்ற வாதிகள் இருக்கும் இடம் மற்றும் பாதை ஆகியவை நத்தம் நில உரிமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் உட்பிரிவு செய்யப்பட்டு பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான், எங்களுக்கு பாதை இல்லாமல் உட்பிரிவு செய்து கொடுத்து விட்டார்கள். தாவா பிராதில் தாவா சொத்துக்கான நான்குமால் விபரங்கள் குறிப்பிடப்படவில்லை என்றால் (சாட்சி பிராதை பார்த்து பதில் அளிக்கிறார்) சரிதான்.
2. பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சர்வே எண் 610/11 வருவாய்த்துறை ஆவணங்களில் யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் அது கூட்டு பட்டாவாக 7 நபர்கள் பெயரில் இருந்தது. மேற்படி 7 நபர்களிடமிருந்து 2–ம் பிரதிவாதி மேற்படி சொத்தை கிரயம் பெற்றார் என்றால் சரிதான். ( சாட்சி தானாக முன்வந்து 7 நபர்களிடமும் கிரயம் பெறவில்லை. 1,2 நபர்கள் விடுபட்டுள்ளது என்று மாற்றி பதில் அளிக்கிறார்). பிரதிவாதி

யாரிடம் கிரயம் பெற்றார் யாரிடம் கிரையம் பெறவில்லை என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தமிழ்வாணன் என்பவரிடம் கிரையம் பெறவில்லை. மற்ற நபர்களின் பெயர் குறித்து எனக்கு நினைவில் இல்லை. 2-ம் பிரதிவாதி கிரையம் பெற்ற கிரைய பத்திரம் செல்லாது என்று நான் எவ்வித பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரிதான். ஆக்கிரமிப்பு செய்த பிறகுதான் கிரையம் ஏற்பட்டது குறித்து எனக்கு தெரியும், 28.11.2016 ம் தேதி அன்று 2-ம் பிரதிவாதி தன் சகோதரரான 1-ம் பிரதிவாதிக்கு தாவாசொத்தை பொறுத்து தான செட்டில்மெண்ட் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான்.

3. தாவா சொத்தில் தற்போது வீடு உள்ளது என்றால் சரிதான், நீதிமன்ற ஆணையர் தாவா சொத்து மற்றும் அருகில் உள்ள சொத்துக்களை பார்வையிட்டாரா என்றால் பார்வையிட்டார். நீதிமன்ற ஆணையர் தனது வரைபடத்தில் எனது வீட்டிற்கு தெற்கே பாதை உள்ளதாக நீல நிறத்தில் சுட்டிக் காட்டியுள்ளார் என்றால் அது பாதை அல்ல 2 அடி அகலம் உள்ள சந்து. மேற்படி சந்து கிழ மேலாக வந்து தென்புறமாக வளைந்து வெளிமுத்தி வீதியில் சேர்கிறது என்றால் சரியல்ல. மேற்படி சந்து கிழ மேலாக வந்து மேற்கு பகுதியில் அடைபட்டு உள்ளது. எனது வீட்டிற்கு தெற்கே உள்ள சந்து கிழக்கு நோக்கி சென்று தென் புறமாக திரும்பி வெளிமுத்தி வீதியில் சேருகிறது என்றால் சரிதான், மேற்படி சந்தில் 1-ம் பிரதிவாதி காம்பவுண்ட் சுவர் எழுப்பி ஆக்கிரமிப்பு செய்துள்ளார்.

4. நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில் சர்வே எண்.610/11 இல் உள்ள கட்டுமானம் எதுவும் பாதையை ஆக்கிரமித்து கட்டப்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் அது குறித்து விபரம் எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையை நான் படித்துப் பார்த்தேனா என்றால் படித்துப் பார்க்கவில்லை, ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டு அளக்கும் போது ஆட்சேபனை தெரிவித்தேன். மேற்படி ஆட்சேபனை செய்வதற்கான எழுத்துப்பூர்வமான ஆவணங்கள் வைத்துள்ளேன் என்றால் நான் செய்த ஆட்சேபனை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. என் வீட்டிற்கு தெற்கே உள்ள சந்தின் அளவானது அரசு ஆவணங்களின்படி 1.4 மீட்டர் என்று சொன்னால் சரிதான். ஆனால் தற்போது ஸ்தலத்தில் இரண்டரை அடி தான் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சந்திற்கு வடக்கே என் வீடு உள்ளது என்றால் சரிதான்.

5. என் வீட்டின் முன் பகுதி வாரம் ஆக உள்ளது என்றால் சரிதான். என் வீட்டை எப்பொழுது கட்டினேன் என்றும் முன் பகுதியான வாரத்தை எப்போது கட்டினேன் என்றும் எனது வழக்குரையிலோ நிரூபண வாக்குமூலத்திலோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் எனது வீட்டின் முன் பகுதியான வாரத்தின் மூலமாக 2 அடி 10 அங்குலம் ஆக்கிரமிப்பு செய்து கட்டி உள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கின் தாவா சொத்தானது

என்ன வகைப்பாடாக இருந்தது என்றால் களத்து மேடாக பொது பயன்பாட்டில் இருந்து வந்தது. நான் தாவா சொத்தை களத்து மேடாக கேட்டு தான் தாவா வழக்கை தாக்கல் செய்து உள்ளேன் என்றால் எனக்கு உரிய வாசல் மற்றும் பாதையை கேட்டு தான் தாக்கல் செய்தேன், களத்து மேடு குறித்து நான் எதுவும் கேட்கவில்லை.

6. சர்வே எண்.610/11 அரசு ஆவணங்களில் என்ன வகைப்பாடு என்பதை காட்டுவதற்கு நான் எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நத்தம் புறம்போக்கு என்பதற்கான 10(1)–ஐ நான் தாக்கல் செய்துள்ளேன். அது எத்தனாவது இலக்க ஆவணமாக உள்ளது என்றால் (சாட்சி தனது நிரூபண வாக்குமூலத்தை பார்த்து பதில் அளிக்கிறார்) நிரூபண வாக்குமூலத்தில் மேற்படி ஆவணம் தாக்கல் செய்ததாக குறிப்பிடப்படவில்லை. நான் தாக்கல் செய்துள்ள வீட்டு வரி ரசீது மற்றும் தண்ணீர் கட்டண ரசீது ஆகியவற்றில் என் வீடு கட்டப்பட்ட தேதியோ அவற்றின் அளவு குறித்தோ எவ்வித குறிப்பும் இருக்காது என்றால் சரிதான்.

7. நான் வீடு கட்டியுள்ள இடத்தின் சர்வே எண் என்ன என்றால் அது குறித்து எனக்கு நினைவில் இல்லை. நான் வீடு கட்டியுள்ள இடத்தின் நீள, அகலம் என்ன என்றால் நீளம் 74 அடி மற்றும் அகலம் 32 அடி ஆனால் அளவு குறைவாக தான் உள்ளது. எனது பிராதிலோ நிரூபண வாக்குமூலத்திலோ நான் வீடு கட்டியுள்ள

இடத்தின் அகலம் எனக்கு பாத்தியப்பட்டதை விட குறைவாக உள்ளது என்ற விவரத்தை குறிப்பிட்டுள்ளேன்னா என்றால் குறிப்பிடவில்லை. நான் தற்போது என் வீட்டில் இருந்து வெளியே போய் வந்து கொண்டுதான் இருக்கிறேன் என்றால் சரிதான். தாவா சொத்துக்கு தற்போது பட்டாவானது 1–ம் பிரதிவாதி பாண்டி பெயரில் மாறி உள்ளது என்றால் சரிதான். மேற்படி பட்டா மாற்றுதலையோ அல்லது 1–ம் பிரதிபாதியின் முன் பார்த்த பெயரில் ஏற்பட்ட பட்டாவோ செல்லாது என்று மனு கொடுத்தேனா என்றால் அவர்கள் பெயரில் பட்டா ஏற்பட்ட விபரம் எனக்கு தெரியாது. தாவா சொத்தான சர்வே எண்.610/11 நத்தம் மனையிடம் என்றும் மேற்படி சொத்தை கூட்டு பட்டாவாக இருந்தவர்களிடமிருந்து 2–ம் பிரதிவாதி 11.08.2010 மற்றும் 09.02.2015 ஆகிய தேதிகளில் சரியான பிரதி பிரயோஜனத்திற்காக கிரயம் பெற்றுள்ளார் என்றும் சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. மேற்படி தாவா சொத்துக்கு 19.04.2012 அன்று 2–ம் பிரதிவாதியின் பெயரில் பட்டா மாற்றம் ஏற்பட்டு அதைத் தொடர்ந்து 28.11.2016 அன்று 2–ம் பிரதிவாதி 1–ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை தான செட்டில்மெண்ட் எழுதி கொடுத்தார் என்றால் அது குறித்தும் எனக்கு தெரியாது. மேற்படி சொத்தில் 1–ம் பிரதிவாதி முறைப்படி அனுமதி பெற்று தார்சு வீடு கட்டி உள்ளார் என்றால் சரியல்ல அவர் முறைப்படி அனுமதி பெறவில்லை அதற்கான ஆவணங்கள் என்னிடம் உள்ளது. நான் என் வீட்டிற்கு தெற்கே

உள்ள சந்தில் 2 அடி 10 அங்களத்திற்கு ஓட்டு வாரம் இறக்கி ஆக்கிரமிப்பு செய்ததை பிரதிவாதிகள் கேட்டதால் தாவா வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பிராதில் குறிப்பிட்டுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து பாதை என்று சொல்வது தவறு என்றும் அது பாதை கிடையாது என்றும் சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2025.11.12 15:29:50 +0530